**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**
O.S.No.35/2024

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 23.01.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வா.சா.1– ராஜுகவுண்டர் த/பெ. குப்புசாமி**
**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. ஏ அட்டவணை சொத்து இரண்டு சர்வே எண்கள் கொண்ட சொத்து என்றால் சரியல்ல. ஒரு சர்வே எண் கொண்ட சொத்தாகும். அந்த ஒரு சர்வே எண்.222/18 ஆகும். அதற்கு தான் வழக்கு போட்டுள்ளேன். சர்வே எண்.222/18 எனது பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல உள்ளது. சர்வே எண்.222/18 க்குரிய பட்டாவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண்.222/18 பட்டா இல்லாததற்கு காரணம் சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு தாவா சொத்திற்கு இரண்டாவது முறையான வழக்கு என்றால் சரிதான். அந்த வழக்கில் 1 ம் பிரதிவாதியின் கணவரும், 2, 3 ம் பிரதிவாதிகளின் தகப்பனார் கம்பத்தி என்பவர் மீது அசல் வழக்கு எண்.44/1994 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

2. அசல் வழக்கு எண்.44/1994 ல் சர்வே எண்.222/10,17,18 ஆகியவை காண்பித்துள்ளேன். சர்வே எண்.222/18 என்ற எண்ணை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.222/17 அதிலும் சொத்துக்களில் வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.222/17 ல் நாளது தேதி வரை குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த இடத்தில் யாரும் குடியிருக்காததால் தான் அபயாகரமான விலங்குகள் இருந்து பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்து வருகின்றன என்றால் சரியல்ல. அதனால் தான் பிரச்சனை ஏற்பட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.222/18 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

3. பிரதிவாதிகள் தான் சொத்தை அனுபவிக்கிறார்கள் என்று வருவாய் துறை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.222/18 என்ற சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.222/18 வடக்கில் கிழமேல் பாதை உள்ளதா என்றால் உள்ளது. அந்த பாதை வழியாக தான் சர்வே

எண்.222/18 பிரதிவாதிகள் சென்று வருகிறார்கள் என்றால் அந்த பாதைக்கும் பிரதிவாதிகளுக்கும் சம்மந்தம் இல்லை. பாதை அமைந்துள்ள சர்வே எண்.222/10 என்றால் சரிதான். சர்வே எண்.222/10 பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் யார் பெயரிலும் இல்லை. சர்வே எண்.222/10 கோவில் நிலமா என்றால் இல்லை எனக்கு சொந்தமானது. சர்வே எண்.222/10 எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணம் கொடுத்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் கொடுக்கவில்லை.

4. சர்வே எண்.222/10 பொதுவான சொத்து என்றாலும், அதில் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொல்வது சரியல்ல. தாவா ஏ பட்டியல் சொத்தில் எனக்கு அனுபவமும், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.222/17, 18 தெற்கில் காலியிடமாக உள்ளது. அந்த காலியிடத்திலிருந்து கிழக்கே சென்றால் வீதிக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். பாதை கிடைக்க வேண்டும் என்ற பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை வேண்டுமென்றே கெட்ட எண்ணத்தோடு, நீதிமன்றத்தில் தூய கரங்களுடன் அணுகவில்லை என்றால் சரியல்ல. வேறொரு சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் வழக்கில்வ வழக்குமூலம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 11:11:58 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**